மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

O.S. No. 25 / 2021

பி.வா.சா.2 – செல்லம் 01.09.2026

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது ஊர் பழையூருக்கும் அழகு கோனார் ஊரான வயல்சேரிக்கும் சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். வயல்சேரி கிராமத்தில் எனக்கு சொந்தமாக நிலங்கள் ஏதும் இல்லை. அழகுகோனாருக்கு திருப்புவனம் பழையூரில் சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. அழகுகோனார் எனது உறவினர் இல்லை. அழகு கோனார் எந்த வருடம் இறந்துபோனார் என்று எனக்கு தெரியாது. அழகு கோனார் இறந்த போது அவருக்கு என்ன வயது என்றும் எனக்கு தெரியாது. அழகுகோனாருக்கு 3 மனைவிகள் என்று அழகுகோனார் சொல்லி எனக்கு தெரியும். அழகுகோனாருக்கு மூன்று திருமணங்களும் எப்போது நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. அழகு கோனாருக்கும் அவரது இரண்டாவது மனைவி இருளாயிக்கும் கிராம வழக்கப்படி விவாகரத்து ஏற்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது அழகு கோனார் சொல்லி எனக்கு தெரியும். 3 வது மனைவி பேச்சியம்மாளை அழகு கோனார் எப்போது விவாகரத்து செய்தார் என்று எனக்கு தெரியாது அழகு கோனார் சொல்லி எனக்கு தெரியும். அழகு கோனாரின் 3வது மனைவியான பேச்சியம்மாள், புளியங்குளத்தை சேர்ந்த கணபதி என்பவரை திருமணம் செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. அழகு கோனார் உடன்பிறந்தவர் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. அழகு கோனார் கடைசி காலத்தில் அவரது உடன்பிறந்தவர்கள் வீட்டில் இருந்து வந்தார்

என்ற விபரம் எனக்கு தெரியாது. அழகுகோனாரை 1ம் பிரதிவாதி முருகன் பராமரித்து வந்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது எனக்கு அழகு கோனார் சொல்லி தெரியும். எனக்கு எழுத படிக்க தெரியும். பி.வா.சா.ஆ.15 உயில் தயார் செய்த போது நான் அங்கு இருந்தேன். பி.வா.சா.ஆ.15 தயார் செய்த போது நான் அங்கு இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அழகு கோனார் அவரது சொத்துக்கள் சம்மந்தமாக வாய்மொழியாக கூறினார் பத்திரங்களை கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.15 உயில் ஆவணத்தில் சுமார் 15 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டதாக என்னிடம் கூறினார். பி.வா.சா.ஆ.15 உயிலில் உள்ள வாசகங்களை அழகு கோனாருக்கு படித்து காண்பித்தார்கள் எனக்கும் படித்து காண்பித்தார்கள். பி.வா.சா.ஆ.15 உயிலில் கண்ட சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே அழகு கோனார் அவரது 3வது மனைவி பேச்சியம்மாளுக்கு 31.01.1990ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.15 உயில் எழுதிய போது உயிலில் கண்ட சொத்துக்கள் அழகுகோனாருக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 உயில் எழுதப்பட்ட காலத்தில் எனது வயது 39 என்றால் சரிதான். அழகுகோனார் என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது எனது தகப்பனாருக்கு நெருங்கிய பழக்கமானவர். அழகு கோனார் சம்மந்தப்பட்ட விபரங்கள் எனது தகப்பனார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அழகுகோனாருக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 உயிலில் கண்ட சொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 உயிலில் அழகு கோனாரின் புகைப்படம் ஏதும் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 உயிலில் சாட்சிகளின் புகைப்படம்

ஒட்டப்படவில்லை மற்றும் சாட்சிகளின் முகவரியை காட்டக்கூடிய அடையாள அட்டை எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 உயில் ஆவணத்தை நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றும் அந்த உயிலில் உள்ள கையொப்பம் அழகுகோனாரின் கையொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் தான செட்டில்மெண்ட்டின் அடிப்படையில் வாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டு வாதி தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 3வது லக்க சொத்து 2ம் பிரதிவாதிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா 3வது லக்க சொத்தை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார். தாவா 3வது லக்க சொத்து இன்று வரை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**